# பழமையான நம்பிக்கைகள் இன்றைய சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்: மானிப்பாய் - சங்குவெளி பிரதேசத்தை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு

## The Impact of Traditional Beliefs in the Contemporary Society

S. Thanurshan[1] , S.H. Christoper[2] & J.F. Nazeera[3]
[1]Second Year , Department of Sociology
[2] Second Year, Department of Geography, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka
[3] Divisional Secretary Officer, Kattankudi Divisional Secretary Office
thanurshan22@gmail.com & Chrishhelan@gmail.com

### ஆய்வு சுருக்கம்

உலகமானது நவீன போக்கை நோக்கி நகரும் தற்காலத்தில் பழமையான நம்பிக்கைகள் மக்களின் வாழ்வியலை பெரிதும் சவாலாக்க கூடிய ஒரு விடயமாக அமையப் பெறுகின்றது. குறிப்பாக இன்றைய காலத்தில் கிராம புறத்தில் இப்பழமையான சிந்தனையின் தாக்கம் எதிர்கால சமூகத்தை முன்னோக்கி செயற்பட முடியாமல் முடக்கும் ஒரு தடைக் கல்லாக அமைகிறது. பிரதானமாக யாழ்ப்பாண பிரதேசத்தை பொறுத்தவரை கலாசாரத்தின் உறைவிடமாகவும், பழமையான விடயத்தின் பொக்கிசமான ஒரு இடமாக காணப்படுகிறது. இதன் காரணமாக அங்குள்ள பெரியவர்கள் மட்டுமில்லாமல் , இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் என பல்வேறு வயதுப் பிரிவினர் இப் பழமையான நம்பிக்கைக்கு உள்ளாகி உள்ளனர். இவை இவ்வாறு தொடர்ச்சியாக கடத்தப்படுமாயின் இன்றைய சமூகம் மட்டுமில்லாமல் எதிர்கால சமூகமும் பழமையான நம்பிக்கைகள் கொண்ட ஒரு சமூகமாக மாற்றமடையும் சவால் காணப்படுகிறது. எனவே இந்த பழமையான நம்பிக்கை இன்றைய காலத்தில் ஏற்படுத்தும் விளைவை கண்டறியும் பொருட்டு “ பாரம்பரிய நம்பிக்கைகள் இன்றைய சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்” என்ற தலைப்பில் மானிப்பாய்- சங்குவெளி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த சமூகவியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்கு முதலாம் நிலைத் தரவுகளை சேகரிப்பதற்காக நோக்க மாதிரியின் அடிப்படையில் 78 பேர் தெரிவுச் செய்யப்பட்டு அவர்களுக்கு வினாக் கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் பல்வேறு வயது அடிப்படையில் , பால் அடிப்படையிலும் நேர்காணல் , பங்குப்பற்றல் அவதானம் மற்றும் இலக்கு குழு கலந்துரையாடல் என்பன மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், இணையத்தள கட்டுரைகள் மற்றும் புலமையாளரின் ஆக்கங்கள் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட பிரதான விடயங்களாக வாய்ப்புகள் தவறவிடப்படுகின்றமை , பழமையை போற்றும் சமூகம் உருவாகுதல் , சுய நம்பிக்கை இல்லாமல் போகுதல் மற்றும் எதிர் மறையான மனநிலை உண்டாகுதல் போன்ற தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. இதற்காக அரசோ, சமூக அமைப்புகளோ விழிப்புணர்வை ஏற்படுத்துதல் , விஞ்ஞானப் பூர்வமான விளக்கத்தை புரிய வைத்தல் , பழமையான நம்பிக்கை என்ற பெயரில் ஏற்படும் குற்றங்களுக்கு கடுமையான தண்டைண விதித்தல், இளைஞர்களை சமூக விடயத்தில் அதிகம் பங்கு கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்தல் மற்றும் ஒரு விடயத்தை பகுப்பாய்வு செய்யும் ஆற்றலை அதிகரிக்கச் செய்தல் போன்ற பரிந்துரைகள் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** பாரம்பரியம், மக்களின் அறியாமை, நவீன சமூகம், சமூக தாக்கம்

### ஆய்வு அறிமுகம்

மனிதன் இயற்கையிலேயே கூடி வாழ விரும்புகின்றான். இவ்வாறு கூடி வாழ்ந்த மனிதன் காலப்போக்கில் இயற்கையில் ஏற்படும் சில நிகழ்வுகளை தமது வாழ்வியலுடன் இணைத்துக் கொண்டு அவற்றை நம்பிக்கைகளாக உருவாக்கி கொண்டான். அந்த வகையில் சமூக அமைப்பு அந்நம்பிக்கைகளுக்கு அமையவே தமது வாழ்வியலை வாழ்ந்து வந்தான். இந்நிலையில் அந்த நம்பிக்கையை மீறி செயற்படுவர்கள் அச்சமூகத்தின் தண்டனைகளுக்கும் உள்ளாகினர். (அகஸ்ட் கொம்டே, 1838) இதன் காரணமாக இந் நம்பிக்கைகள் மனிதனின்

வாழ்வியலில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக தலைமுறை தாண்டியும் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்றது. (ரிச்சர்ட் எம். டார்சன் 1952).

அந்தவகையில் ஒன்றை செய்தால் அல்லது செய்யத் தவறினால் தீங்கு விளையும் என்ற அச்சத்தின் அடிப்படையில் தீங்கைத் தவிர்க்க அல்லது ஏற்கனவே ஏற்பட்டு விட்ட தீங்கை போக்க மாற்றுச் செயலைக் கடைப்பிடிப்பதே பழமையான நம்பிக்கை ஆகும். மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகிறது. இவை தமது வாழ்வு வளமும் , நலமும் பெறும் என்ற அடிப்படையில் சில பழமையான நம்பிக்கைகளையும் தமது வாழ்வில் ஒரு பகுதியாக பின்பற்றி வருகின்றான். குறிப்பாக இந்த நம்பிக்கைகளை சான்றுகள் வாயிலாக எம்மால் நிறுவ முடியாத ஒன்றாகும். நமது முன்னோர்களின் வழிவந்து இன்றும் அவர்களின் சிந்தனையின் அடிப்டையிலேயே இன்றைய சமூகமும் அடுத்த தலைமுறையும் செயற்படுவதே இப்பாரம்பரிய நம்பிக்கைகளாகும். (சு. சண்முகசுந்தரம், 1975) காலப்போக்கில் இவை மனிதனின் அன்றாட வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்றாக முக்கியமடைந்துள்ளது, இன்றைய நிலையில் புதிய விடயங்களுக்கு காரண காரிய தொடர்பை தேடும் இன்றைய சமூகத்தில் தாம் அன்றாடம் பின்பற்றும் சில பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு காரண , காரிய தொடர்பைக் கொண்டு உண்மை விளக்கத்தை ஆராய முற்படுவதில்லை. காரணம் அறியாமலே அவற்றை அன்றாட வாழ்கையில் தாம் பின்பற்றுவது மட்டுமில்லாமல் மற்றவர்களுக்கும் அதனை கடத்துகின்றனர்.

அந்த வகையில் மனிதன் ஆதி காலத்தில் இயற்கையோடு அதிகம் இணைந்து காணப்பட்டமையினால் அவற்றில் இடம்பெரும் மாற்றங்களை தமது வாழ்வியலுடன் தொடர்ப்புப்படுத்தியே வாழ்ந்து வந்தான். இதன் காரணமாக முன்னோரின் நம்பிக்கைகள் இயற்கையுடன் இணைந்த ஒன்றாகவே காணப்பட்டது. அந்த நம்பிக்கைகள் ஆன்மா சார்ந்ததாகவும் , கடவுள் சார்ந்ததுமாக காணப்பட்டது. (அகஸ்ட் கொம்டே 1838) அவற்றுக்கு பிற்பட்ட காலத்தில் கடவுள் , ஆன்மா மீதான நம்பிக்கைகள் வழுவிழந்து விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறு விஞ்ஞாக ரீதியாக பல விடயங்கள் நிரூபிக்கப்பட்டாலும் சில சமூகங்கள் விஞ்ஞான விளக்கங்கள் சமூகத்திற்கு முரணானது , தமது பண்பாட்டிற்கு தீங்கு விளைவிக்க கூடிய ஒன்று என்று விஞ்ஞான விளக்கத்தை மறுத்து தொடர்ந்தும் பழமையான போக்கில் செல்கிறது.

இதனடிப்படையில பாரம்பரிய நம்பிக்கைகள் அக்காலத்திற்கு பொருத்தமானதாக அமைந்தாலும் தலைமுறை கடந்து செல்லும் போது அவை எண்ணற்ற சவால்களை நவீன சமூகத்திற்கு வழங்குகின்றது. அந்த வகையில் பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும் முக்கியமளிக்கும் ஒரு இடமாக யாழ்ப்பாணம் காணப்படுகிறது. இதன் காரணமாக இந்த பாரம்பரிய நம்பிக்கைகளின் தாக்கம் உச்ச அளவில் காணப்படும் ஒரு இடமாக யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்த முடியும்.

இதன் காரணமாக இன்றைய சமூகத்தில் இப்பாரம்பரிய நம்பிக்கைகளினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களை இணங்காணும் பொருட்டு மானிப்பாய் - சங்குவெளி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பிரச்சினை

இன்றைய சமூகமானது நவீனத்துவத்துவம் என்ற ரீதியில் வெகுவாக விருத்தி அடைந்து வர கீழைத்தேய நாடுகளை பொருத்தவரை சமூக ரீதியான முன்னேற்றம் குறைவாக காணப்பட பிரதான காரணியாக அமைவது இப்பாரம்பரிய நம்பிக்கைகள் ஆகும். குறிப்பாக இன்றைய சமூகத்தில் ஒவ்வொரு விடயத்திற்கும் விஞ்ஞான ரீதியான விளக்கத்தை தேடும் தருவாயில் கீழைத்தேய நாடுகளின் சடங்குகள் , சம்பிரதாயங்கள் என ஒவ்வொரு விடயத்திலும் பெருமளவான தாக்கத்தை இத்தகைய பாரம்பரிய நம்பிக்கைகள் கொண்டுள்ளது. அந்த வகையில் இலங்கையை பொறுத்தவரை அடிப்படையிலேயே பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும் உயர் அந்தஸ்தை வழங்கும் ஒரு இடமே யாழ்ப்பாணமாகும். இங்கு இடம்பெறும் ஒவ்வொரு சமூக நிகழ்வுகளிலும் பாரம்பரிய நம்பிக்கை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக விருத்தியடைந்துள்ளது. இதன் மூலம் இம்மக்கள் இவர்களை அறியாமலே இந்த நம்பிக்களிலிருந்து மீள முடியாமல் தொடர்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக பழமையான யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை சமூக ரீதியாக வலுப்பெற்ற ஒரு இடமாகவே காணப்பட்டது. (இந்திரபாலா 1972.ப 62) இருந்த போதும் இன்றைய யாழ்ப்பாண சமூகம் வீழ்ச்சி அடைந்து காணப்பட

இப்பாரம்பரிய நம்பிக்கையின் தாக்கம் பெருமளவு காணப்படுகிறது. இப்பாரம்பரிய நம்பிக்கைகள் தொடர்ச்சியாக விஞ்ஞான பூர்வமான விடயத்தை ஆராயும் சமூகத்தை அடக்கி ஒரு விருத்தியடையாத , பலமற்ற சமூகத்தையே உருவாக்கி கொண்டு வருகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை ஏற்கனவே பல்வேறு ரீதியான சவால்களை எதிர்க் கொண்டு வரும் நிலையில் இப்பாரம்பரிய நம்பிக்கைக்கள் தாக்கம் மேலும் இம் மக்களின் வாழ்வியலை சிக்கலுக்கு உள்ளாக்குகிறது. எனவே இத்தகைய நம்பிக்கையின் தாக்கத்தை இணங்காணக் கூடிய தேவை தற்போது அதிகம் உணரப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

இப்பாரம்பரிய நம்பிக்கைகள் யாழ்ப்பாண சமூகத்தில் பாரியளவான தாக்கத்தை தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இவை இவ்வாறு தொடர்ச்சியாக பின்பற்றப்படும் போது அவை இன்றைய தலைமுறையை மட்டுமில்லாமல் அடுத்து வரும் நவீன சமூகத்தையும் பழமையான போக்கிற்கு இட்டுச் செல்ல அதிக வாய்ப்புகள் காணப்படுகிறது. ஏற்கனவே தமது வாழ்வியலில் எண்ணற்ற சவால்களை சந்தித்து வந்த இந்த சமூகம் அடுத்த தலைமுறைக்கு பழமை என்ற ஒரு மிகப் பெரிய சவாலை வழங்குவதற்கு தம்மை அறியாமலே செயற்பட்டு வருகின்றது. இவை ஒவ்வொரு தலைமுறையாக சங்கிலி அமைப்பில் கடத்தப்படுவதனால் மக்கள் அதிகளவான சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே பாரம்பரிய நம்பிக்கையினால் மானிப்பாய் - சங்குவெளி மக்கள் எதிர்கொள்ளும் சமூக ரீதியான தாக்கங்களை இணங்காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறையியல்

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொற்வதற்காக பண்பு ரீதியான ஆய்வு முறை (Qualitative Research Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது சமூக விஞ்ஞான ஆய்வு என்ற அடிப்படையில் இதன் முதலாம் நிலை நுட்பமுறையாக நோக்க மாதிரியின் அடிப்படையில் 78 நபர்கள் தெரிவுச் செய்யப்பட்டு வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. மேலும் கிராம அதிகாரி, ஆலய தர்மகர்த்தா மற்றும் ஊர் மக்கள் 07 பேரிடம் திட்டமிடப்பட்ட நேர்காணல் மூலமும் ஊரின் முதியோர், இளைஞர்கள், பட்டதாரிகள் மற்றும் வேலை செய்பவர்கள் என பல்வேறு வயதுப் பிரிவினரின் இலக்கு குழுக் கலந்துரையாடல் (Focus Group Discussion) மூலமும், கள ஆய்வின் மூலமும் இவ்வாய்வின் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன.

இரண்டாம் நிலைத் தரவுகளாக கிராம சேவகர் அறிக்கை பத்திரிக்கைகள் , யாழ்ப்பாண சமூகம் தொடர்பான நூல்கள் , இலத்திரனியல் வெளியீடுகள் மற்றும் புலமையாளர்களின் ஆக்கங்கள் (Scholar Article) மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு Ms Excel, Ms Word மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## இலக்கிய மீளாய்வு

ஆய்வு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள பல்வேறுப்பட்ட ஆய்வுகள் , நூல்கள் ஆய்வுகளுக்கு உதவும் எனும் கண்ணோட்டத்தில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக ஆய்வினை தெளிவுப்படுத்தவும் , ஆய்வினை சிறந்த முறையில் வடிவமைக்கவும் , ஆய்வு தொடர்பான மேலதிகமான அறிவினைப் பெற்றுக் கொள்ளவும் முடியுமாக இருந்தது.

தீக்கதிர் அ. குமரேசன் (2020) என்பவரால் வெளியிடப்பட்ட “ நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளும்” எனும் நூலில் மூட நம்பிக்கையால் பயனடைவோர் யார்? பாதிக்கப்படுபவர் யார்? பார்ப்பனர்களிடம் மூடநம்பிக்கை குறைவாக காணப்பட மற்ற சமூக மக்களிடம் இவை அதிகமாக இருப்பதற்கான காரணம் எவை என கேள்விகளை எழுப்பி அதற்கான பதிலையும் குறிப்பிடுகின்றார். இப்புத்தகத்தின் மூலம் மூடநம்பிக்கையின் தாக்கங்களையும், அவை சமூகத்தில் நீடிப்பதன் காரணத்தையும் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் நவீன சமூகத்தில் இதன் தாக்கத்தை இவர் குறிப்பிடவில்லை.

சு. சண்முகசுந்தரம் (1975) என்பவரால் வெளியிடப்பட்ட " நாட்டுப்புற இயல்" எனும் நூலில் காரண , காரிய தொடர்புக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை எனறும் , சான்றுகளின் அடிப்படையிலோ காரண காரிய தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என டாக்டர். சு. சக்திவேல் கூறுவார் என இவர் சுட்டிகாட்டுகிள்றார். இந்நூலின் மூடநம்பிக்கை தொடர்பான அடிப்படை விளக்கத்தை பெற முடியும்.

சுதா சின்னசாமி (2014) என்பவரால் வெளியிடப்பட்ட " மூட நம்பிக்கையால் குழந்தைகளின் அறிவாற்றல் மூடப்படுகிறது" என்ற சிறப்புக் கட்டுரையில் ஒரு சந்ததியினால் ஏதோ ஒரு தேவைக்கு செய்யப்படும் சில விடயங்கள் அதனை அடுத்து வரும் சந்ததியினர் அதனையே வழக்காக கொண்டு செயற்படுவதாக கூறுகின்றார். குறிப்பாக ஏன், எதனால் , எதற்காக செய்கினறோம் என்ற ஒரு உணர்வும் இல்லாமல் காலங்காலமாய் செய்கின்றோம் அப்படியே மூடநம்பிக்கை வேரூன்றி கிடக்கிறது நமது சமூதாயத்தில் என சமூகத்தில் மூடநம்பிக்கையின் தாக்கத்ததை சுருக்கமாக விபரிக்கின்றார்.

" மனிதம் போ(தூ)ற்றும் மூடநம்பிக்கை" (www.tamilmirror.lk) என்ற இணையத்தளப் பகுதியில் மூடநம்பிக்கையினால் ஏற்படும் சமூக தாக்கங்கள் , மக்களின் அறியாமை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சமூகத்தில் பாரம்பரிய நம்பிக்கையின் வீரியத்தை விளங்கிக் கொள்ள கூடியதாக அமைந்தது.

"தமிழரின் மூட நம்பிக்கைகள்" (www.ttamil.com) என்ற இணையத்தள பகுதியில் பண்டைய காலத்தில் தமிழர்களிடையே காணப்பட்ட பாரம்பரிய நம்பிக்கைகளையும் அதற்கான உண்மை விளக்கத்தையும் விளங்கிக் கொள்ள கூடியதாக உள்ளது. இவை ஒவ்வொரு பாரம்பரிய நம்பிக்கையின் பின்னால் உள்ள தெளிவான விளக்கத்தை வழங்குகிறது.

"மூடநம்பிக்கை" (www.tamilvu.org) என்ற இணையத்தள பக்கத்தில் மூடநம்பிக்கையில் இருந்து சமூகம் வெளிவர வேண்டும் என்று கருத்துக்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் பாரம்பரிய நம்பிக்கையில் இருந்து மக்களை வெளிக்கொணரும் கருத்துக்களை அறிந்து கொள்வதாக அமைகிறது.

"நாட்டுப்புறவியலில் நம்பிக்கை" (https://segarkavithan.blogspot.com/2011/02/blog-post_7012.html?m=1) என்ற இணையத்தள பகுதியில் நம்பிக்கை , மூடநம்பிக்கை தொடர்பான பூரணமான விளக்கத்தை விளங்கி கொள்ள கூடியதாக அமைந்தது. இதன் மூலம் நம்பிக்கை மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளை வேறுப்படுத்தி நோக்க இலகுவாக அமைந்தது.

## ஆய்வு பிரதேசம்

வட மாகாணத்திலுள்ள யாழ் மாவட்டத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 30 கிராம அலுவலர் பிரிவில் சங்குவெளி ஒன்றாகவும். இதன் வடக்கு எல்லையாக கந்தரோடையும் , கிழக்கு எல்லையாக உடுவில் வடக்கும், மேற்கு எல்லையாக வலிகாமம் பிரதேச செயலக பிரிவையும் கொண்டமைந்துள்ளது. இக்கிராமத்தின் சிறப்பியல்பானது வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருத நிலத்தின் இயல்புகளை கொண்டதாக காணப்படுகிறது. அரசர் காலத்து குளங்கள் , வழுக்கையாறு , பாடசாலை , ஆலயம் , ஒல்லாந்தர் காலத்து வீதி, தற்காலத்து தேவாலயங்கள் என்பன சங்குவெளியின் சிறப்பை கூறுகிறது.

இப்பிரதேசத்திற்கு சங்குவெளி என வர பல காரணம் உண்டு இக்கிராமத்தின் மேற்கு எல்லையாக வழுக்கையாறு ஓடுகின்றது. இவ்வாற்றின் எல்லைக் கரையின் மழைக் காலத்தில் சங்குகள் வந்து ஒதுங்குவதனால் சங்குவெளி என அழைக்கப்படுகிறது.


இப்பிரதேசத்தில் ஒரு கலவன் பாடசாலையும் , 03 முன்பள்ளி பாடசாலையும் காணப்படுகிறது. பொருளாதார நடவடிக்கைகளாக பெரும் போகமாக நெற்பயிர்ச் செய்கையும் , சிறு போகமாக கத்தரி , பயறு , வெள்ளரி போன்றன மேற்கொள்ளப்படுகிறது. இங்கு 890 குடும்பத்தை சேர்ந்த 2903 பேர் காணப்படுகின்றனர். இதில் 1475

ஆண்களும் 1428 பெண்களும் உள்ளடங்குகின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் 874 பேர் தொழில் செய்பவர்களாகவும், 232 பேர் தொழில் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். கல்வியை பொறுத்தவரை 547 பேர் கல்வியை தொடர்கின்றனர் அதில் 77 பேர் பட்டதாரிகளாக காணப்படுகின்றனர். கல்வியை தொடர்ச்சியாக பெற முடியாதவர்களாக 30 நபர்களும் உள்ளடங்குகின்றனர். குறிப்பாக 53 மாற்றுத் திறனாலிகளும் 227 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் காணப்படுகிறது. ஆண்களை விட பெண்களின் ஈடுபாடு சமூக ரீதியாக அதிகமாகவே காணப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரதானமாக 60 வயதை தாண்டிய முதியோர் 591 பேர் உள்ளடங்குகின்றனர் இப்பிரதேசத்தில் அதிகரித்த பாரம்பரிய நம்பிக்கை காணப்படுவதற்கு முதியோரின் சனத்தொகை பிரதான தாக்கம் செலுத்துகிறது. குறிப்பாக இவர்கள் இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 20.35 % ஆகும்.

## பெறுபேறுகள்

மானிப்பாய் - சங்குவெளி பிரதேசத்தை பொறுத்த வரை இவர்களின் மொத்த சனத்தொகையில் அதிகமானப் பங்கை முதியோர் கொண்டுள்ளனர். அங்குள்ள குடும்பங்கள் கூட்டு குடும்பங்களாக காணப்படுவதனால் அக்குடும்பத்தின் செயற்பாடுகள் யாவும் அக்குடும்பத்தின் மூத்த உறுப்பினரின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் அங்குள்ள குடும்பத்தில் பழமை என்று ஒரு விடயம் தவிர்க்க முடியாத ஒன்றாக தாக்கம் செலுத்துகிறது. இதன் காரணமாக இவர்களின் வாழ்வியலில் பழமை தொடர்ச்சியாக தமது பங்களிப்பை மேற்கொண்டு வர காலப்போக்கில் இவை ஒரு சவாலான ஒரு விடயமாக மாற்றமடைந்து வருகிறது. குறிப்பாக இன்றைய சமூகமானது நவீன ரீதியில் தமது காலடியை வைக்க இந்த பழமையான நம்பிக்கைகள் இவர்களுக்கு பெரும் சவாலாக அமைகிறது. பொதுவாக இந்த பழமையான நம்பிக்கையின் காரணமாக இன்றைய சமூகம் மட்டுமில்லாமல் எதிர்கால சமூகமும் பலவித தாக்கங்களை எதிர்கொள்ள காத்திருக்கின்றது. அந்த வகையில் இப்பாரம்பரிய நம்பிக்கையின் காரணமாக இன்றைய நவீன சமூக மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை நோக்குவோம்.

**வரைபடம் 1. பாரம்பரிய நம்பிக்கையினால் இன்றைய சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்**




- மூலம் : வினாக்கொத்து பகுப்பாய்வு

n = 78

குறித்த சமூகத்தில் மக்களின் வாய்ப்புகள் அதிகமாக தவறவிடப்படுகின்றமை , தொடர்ச்சியாக பழமையை போற்றும் சமூகம் உருவாகின்றமை , தம்மிடமுள்ள சுயநம்பிக்கை குறைந்து போகின்றமை , சமூக செயற்பாடுகளில் முதியோரின் ஆதிக்கமும் தலையீடும் தொடர்ச்சியாக அதிகமாக காணப்படுகின்றமை, தமது வாழ்வின் பல முக்கிய சுப விடயங்கள் தடைப்படுகின்றமை, மக்கள் மத்தியில் எதிர்மறையான மனநிலை ஒவ்வொரு விடயத்திலும் நிலவுதல் மற்றும் முதியோருக்கும் இளைஞருக்கும் இடையில் அதிகமான மனக்கசப்பு ஏற்படுகின்றமை போன்ற காரணங்களுடன் இணைத்து விஞ்ஞான ரீதியான விடயத்தை மறுக்கும் சமூகம்

உருவாகுதல், உடல் சார்ந்த பாதிப்புகள் அதிகம் ஏற்படல் , சமூகத்தில் அதிகமான கருத்து முரண்பாடு ஏற்படுவதையும் பழமையான நம்பிக்கையால் ஏற்படும் சமூக தாக்கங்களாக அமைந்துள்ளன என்பதனை மக்களிடம் இருந்து பெறப்பட்ட வினாக் கொத்துக்களின் அடிப்படையில் எடுத்துக்காட்ட முடியும்.

### 01. வாய்ப்புகள் தவறவிடப்படுகின்றமை

இன்றைய காலக்கட்டத்தில் வாய்ப்புகள் என்பது இலகுவாக கிடைக்க கூடிய ஒரு விடயமல்ல. ஒரு வாய்ப்பை தவறவிட்டால் அடுத்த வாய்ப்பும் இலகுவாக கிடைத்து விடுவதில்லை. அந்த வகையில் இப்பிரதேசத்தில் அதிகமான நபர்கள் இந்த பாரம்பரிய நம்பிக்கையின் காரணமாக வாழ்வின் பல முக்கிய சந்தர்பங்களை தவறவிட்டிருக்கின்றனர். குறிப்பாக ஒரு தொழிலுக்கு செல்லும் போது பூனை குறுக்கே சென்றால் அந்த விடயம் சரிவர நடக்காது, விதவை பெண்ணை கண்டால் அன்றைய பொழுது சிறப்பாக அமையாது, காலையில் கண்விழிக்கும் முகம் ராசியானதாக அமைந்தால் நாம் செல்லும் விடயம் கைகூடும் மற்றும் ஒரு விடயத்திற்கு செல்லும் முன் மங்கல பொருட்கள் கீழே விழுந்தால் அவ்விடயம் எமக்கு ஆபத்தாகவே முடியும் என கூறுவதன் மூலம் வாழ்வின் பல முக்கிய சந்தர்ப்பங்களை தவற விட்டு ஒரு நெருக்கடியான நிலையிலேயே தொடர்ச்சியாக மக்கள் வாழ்கின்றனர். குறிப்பாக இப்பிரதேச மக்களில் 11% மானோர் இந்த பாரம்பரிய நம்பிக்கையின் காரணமாக பல அறிய வாய்ப்புகளை கூட தவறவிட்டுள்ளனர். இவற்றிலும் பிரதானமாக 15- 30 வயதிற்கு உட்பட்ட 72.6% மானோர் தமது தொழில் சார்ந்த, பொருளாதாரம் சார்ந்த, கல்வி சார்ந்த வாய்ப்புகளை தவறவிட்டுள்ளனர்.

> ‘‘ இவ்வகை நம்பிக்கை எம் சமூகத்தில் பிரிக்க இயலாத ஒன்றாகும் இந்த பாரம்பரிய நம்பிக்கையை மீறி செயற்படும் போது சமூகத்தின் தவறான கண்னோட்டத்திற்கும் ஆளாகும் வாய்ப்புகளும் உண்டு. குறிப்பாக பலமுறை நான் வியாபாரத்திற்கு செல்லும் போது பூனை குறுக்கே சென்றது, விறகுடன் முன்னால் வந்தனர் என்ற காரணத்தால் அன்றைய தினத்தின் வியாபார நடவடிக்கை தடைப்பட்டுள்ளது. மேலும் குங்குமம் கொட்டியதன் காரணமாக நான் விரும்பிய துணி கடை வியாபாரத்தையும் மேற்கொள்ள முடியாமல் போனது’’ (அக்டோபர் 16, நேர்காணல் 1)

> ‘‘ விளையாட்டு போட்டியன்று வீட்டில் சாமியின் புகைப்படம் கீழே விழுந்ததன் காரணமாக எனது வீட்டார் ஏதோ தீய சகுனம் நீ எங்கும் செல்ல வேண்டாம். அவ்வாறு அதை மீறி சென்றால் அவை என் உயிருக்கே ஆபத்தாக முடியும் என என்னை தடுத்து விட்டனர்’’ (அக்டோபர் 17, நேர்காணல் 7)

இதனடிப்படையில் அன்றாட நாளின் திட்டமிடலைக் கூட இப்பாரம்பரிய நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்கின்றனர். அதன் மூலம் மக்களின் பல அறிய வாய்ப்புகள் தொடர்ச்சியாக இந்த சமூகத்தில் தவறவிடப்படுகின்றமையை குறிப்பிட முடியும். மேலும் மேற்கத்தேய இளைஞர்படை தமக்கான வாய்ப்புகளை தொடர்ச்சியாக உருவாக்கி கொள்ள இப்பிரதேசத்தின் இளைஞர்கள் கிடைக்கின்ற வாய்ப்புகளை இத்தகைய பாரம்பரிய நம்பிக்கையின் அடிப்படையில் தவறவிடுகின்றனர்.

### 02. பழமையை போற்றும் சமூகம் உருவாகுதல்

காலத்திற்கு ஏற்றது போல் பல விருத்தியடைந்த செயற்பாடுகளை மேற்கொள்வதே ஒரு ஆரோக்கியமான சமூகமாகும். அந்த வகையில் இன்றைய காலகட்டத்தை பொறுத்தவரை விஞ்ஞான ரீதியாக செயற்படும் ஒரு நாகரீகமான சமூகமாகும். இவ்வாறு காணப்பட இப்பழமையான நம்பிக்கைகள் சமூகத்தில் ஆரோக்கியமற்ற ஒரு சமுதாயத்தையே உருவாக்குகிறது. இத்தகைய பழமையான நம்பிக்கைகள் எழுத்து வழக்கற்ற ஒரு வாய்மொழி சார்ந்ததாக காணப்படுகிறது. (பி.ஏ போட்கின்) குறிப்பாக விக்கல் ஏற்படும் போது தன்னைப் பற்றி யாரோ நினைக்கிறார்கள் என்றும், நாய் ஊளையிட்டால் மரணம் நிகழும் என்றும், காகம் கரைந்தால் உறவினர்கள் வருகை தருவர் என்றும், நாய் தனது காலை நீட்டினால் தனக்கு நன்றி சொல்லுவதாகவும் , ஒரு விடயத்ததை நினைக்கும் போது யாதேனும் ஒலி கேட்டால் அவை நினைத்தவாறே நடைபெறும் என்றும்

, வெள்ளியன்று முடி வெட்டினால் குடும்பத்திற்கு ஆகாது என்றும், வாசலில் நகத்தை வெட்டக் கூடாது என்றும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் இவர்களின் வாழ்க்கை சுழல்கிறது.

குறிப்பாக இக்காரணிகள் எல்லாம் இயற்கையில் வழமையாக இடம்பெற கூடிய ஒரு விடயமாக அமைகிறது. இருந்த போதும் மனிதன் இக்காரணிகளை தனக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ அமைத்து கொண்டு தொடர்ந்து செயற்படும் போது அச்சமூகமானது பழமை என்ற சிந்தனையிலேயே மூழ்குகிறது. இப்பிரதேசத்தில் சிறுவர்களின் கருத்திற்கும் முதியவர்களின் கருத்திற்கும் இலகுவாக வித்தியாசம் கண்டுக்கொள்ள முடியவில்லை அதன் காரணம் தம் சார்ந்த நம்பிக்கைகளை அவர்களின் ஆழ்மனதில் புதைத்து விட்டனர் என்றே கூற முடியும். குறிப்பாக இப்பிரதேசத்தில் 16% மானோர் இப்பழமையான நம்பிக்கைகளுக்குள் அதி தீவிரமாக சிக்கித் தவிக்கின்றனர். இந்நிலையில் காணப்படும் போது சமூகமானது விருத்தி அடையாது தொடர்ச்சியாக உண்மை விளக்கத்தை சிந்திக்காது காலம் காலமாக பின்பற்றிய மரபு என்று பழமையை கட்டாய காரணியாக தமது வாழ்வில் இணைத்து கொள்கிறது.

### 03. சுய நம்பிக்கை இல்லாமல் போகுதல்

சுய நம்பிக்கை என்பது ஒருவர் தன்மீது தாமே கொண்டுள்ள ஒரு அபிப்ராயமாகும். இவை ஒவ்வொரு மனிதரின் ஆளுமையிலும் பிரதானமாக செல்வாக்கு செலுத்தக் கூடிய ஒன்றாக காணப்படுகிறது. (Meet, 1934) அந்தவகையில் சுயத்தில் அதிகளவு தாக்கம் செலுத்த கூடிய ஒரு விடயமாக பாரம்பரிய நம்பிக்கை காணப்படுகிறது. குறிப்பாக அதிகம் எதிர்மறையாக சிந்திக்க கூடிய சமூகத்தையும், நம்பிக்கையற்ற ஒரு சமூகத்தையும், பிறரை சார்ந்து வாழ கூடிய சமூகத்தையே உருவாக்குகிறது. குறிப்பாக உடல்நிலை சரியில்லை என்றால் பூசரியிடம் சென்றால் சரியாகிவிடும் என்றும், மந்திரிக்கப்பட்ட கயிறை கட்டினால் நினைத்த காரியம் கைக்கூடும் என்றும், தாயத்து கட்டினால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்ற சிந்தனையை இப்பாரம்பரிய நம்பிக்கைகள் உருவாக்குகிறது. இதன் மூலம் இங்கு வாழும் மக்கள் தனித்து செயற்பட முடியாத ஒரு நெருக்கடி நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் 8.2% மானா மக்கள் தொடர்ச்சியாக வாழ்க்கையை யதார்த்தமான போக்கில் வாழ முடியாமல் நம்பிக்கையற்று வாழ இந்த மூட நம்பிக்கைகள் வழிவகுக்கிறது.

**அட்டவணை 01, சங்குவெளி மக்களிடையே காணப்படும் சுய நம்பிக்கை தொடர்பான தரவு**

| இல | விபரம் | விடயத்தை ஏற்றுக்கொண்டவர்கள் (%) | விடயத்தை ஏற்றுகொள்ளாதவர்கள் (%) |
|---|---|---|---|
| 01. | மந்திரித்த கைறினால் நினைத்த விடயம் கைகூடுமா? | 81 | 19 |
| 02. | பூசாரியிடம் சென்றால் பிரச்சினைகள் தீருமா? | 78 | 22 |
| 03. | விலங்குகளின் நடத்தையை வைத்து நமது தீர்மானத்தை மேற்கொள்ளுவது சரியா? | 80 | 20 |
| 04. | இராசி கல்லின் மீது உங்களுக்கு நம்பிக்கை உண்டா? | 84 | 16 |
| 05. | வாகனத்தில் எழுமிச்சை கட்டுவது உமக்கு பாதுகாப்பு அளிக்கின்றதா? | 90 | 10 |
| 06. | உள்ளங்கை அறித்தால் பணம் கிடைக்கும் என்பதனை ஏற்றுகொள்கிறீரா? | 84 | 16 |
| 07. | திருஸ்டி எடுப்பதனால் பிறருக்கு நம்மீதுள்ள தீய எண்ணங்கள் நீங்குமா? | 76 | 24 |

மூலம் : வினாக்கொத்து பகுப்பாய்வு 2020

n = 78

இவற்றினை அவதானிக்கும் போது இப்பிரதேச மக்களுக்கு இயற்கையாக இடம்பெறும் சில விடயங்களுக்கு கூட பிறரின் உதவி தேவை என்பது புலப்படுவதோடு மக்கள் தமது நம்பிக்கையை இழந்து எந்தவொரு இடத்திலும் பிறருடைய கருத்துக்கள் உண்மையை போதிக்க கூடியன என்ற மனநிலையை உருவாக்குகிறது. பொதுவாக இந்த சமூகத்தில் விஞ்ஞான மருந்துக்கள் தமது உடல்நிலையை சரிசெய்யும் என்பதை காட்டிலும் பூசாரியின் ஒரு கயிர் தனது ஒட்டுமொத்த பிரச்சினைக்கும் தீர்வைத் தருவதாக இன்றளவும் நம்பிக் கொண்டுள்ளனர். அதுமட்டுமல்லாது இராசி கல் அணிந்து கொண்டால் வாழ்க்கையில் பல நன்மைகள் பிறக்கும் என்பது இம்மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. இதன் மூலம் புலப்படுவது யாதேனில் வாழ்க்கையில் இவர்கள் தன் மீதுள்ள நம்பிக்கையை காட்டிலும் பிற நபர்களின் மீதுள்ள, பிற பொருட்களின் மீதுள்ள மற்றும் பிற விலங்குகளின் செயற்பாடுகளின் மீதுள்ள நம்பிக்கை அதிகமாக காணப்படுகிறது.

### 04. முதியோரின் ஆதிக்கம் அதிகம் காணப்படல்

காலங்கள் மாற்றமடையும் போது சமூக அமைப்புகளும் , தலைமைத்துவங்களும் மாற்றமடையும் போதே சமூகம் எழுச்சியான போக்கை அடைய முடியும். அந்த வகையில் பாரம்பரிய நம்பிக்கையை பொறுத்தவரை முதியோரின் தாக்கம் என்பது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது. குறிப்பாக இப்பிரதேசத்தில் மொத்த சனத்தொகையில் 591 பேர் முதியவர்களாகவே காணப்படுகின்றனர். இவை சனத்தொகையில் 20.35% மானோர் முதியவராகவே காணப்படுவது இளைஞர் சமூதாயத்தை கட்டுப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. இதன் காரணமாக விரும்பியோ , விரும்பாமலோ ஏனையவர்கள் இவர்களின் கட்டளைக்கு கீழ்படிந்தே செயற்படுகின்றனர். இதன் காரணமாக எந்தவொரு விடயத்தையும் இவர்களைப் போலவே சிந்திக்கும் ஒரு சமூகத்தை எளிதில் உருவாக்கி விடுகின்றனர். அச்சமூகம் இதே நம்பிக்கையை பின்பற்றி அடுத்து வரும் இளைய சமூதாயத்திற்கு கடத்துகிறது. இதன் காரணமாக முதியோரின் சிந்தனையும், செயலும் தலைமுறை கடந்தாலும் தொடர்ச்சியாக நவீன சமூகத்தில் தாக்கம் கொள்கிறது. இது தொடர்பான இலக்குக் குழு கலந்துரையாடலின் போது,

'' வாழ்கையில் அனைத்து விடயத்திற்கும் விஞ்ஞான ரீதியான விளக்கத்தை எதிரப்பார்க்க முடியாது எமது முன்னோர்களின் கூற்று எங்களது வாழ்வை நெறிப்படுத்தவே அமைந்திருக்கும் மாறாக அவற்றை மாற்றியமைத்து நெருக்கடியான சூழலில் வாழ்வது அவர்களின் பழமையை மதிக்காதது போல் அமையும்'' என கூறுகின்றனர். (குழு கலந்துரையாடல்)

இக்கருத்தினை எடுத்து நோக்கும் போது முதியோரின் பழக்க வழக்கத்திற்கும் , அவர்களின் பாரம்பரியத்திற்கும் இம்மக்கள் எத்தகைய மதிப்பினை கொண்டுள்ளனர் என்பது புலப்படுகிறது. அதன் மூலம் இங்குள்ள இளைஞர்கள் விஞ்ஞான தன்மையில் சிந்திக்கும் ஆற்றலை இழந்து முதியோரின் ஆதிகத்தில் ஆண்டாண்டு காலம் தொடர்ச்சியாக வாழ்வது தெளிவாக புலப்படுகிறது.

### 05. சுப விடயங்கள் தடைப்படுகிறது

பொதுவாக சுப விடயங்கள் என்பது தனது திறமையின் வெளிப்பாடாகவும் , வாழ்க்கையின் தேவையாகவுமே காணப்படுகின்றது. ஒரு மனிதனின் வாழ்வில் சுப விடயங்கள் என்பது இன்றியமையாத ஒன்றாகும் அந்த வகையில் அத்தகைய சுப விடயங்களை நேரம் , சகுனம் பார்த்து தடை செய்யும் ஒரு விடயமாக இப்பாரம்பரிய நம்பிக்கைகள் காணப்படுகிறது. குறிப்பாக ஒரு நல்ல விடயத்திற்கு செல்லும் போது பூனை குறுக்கே செல்ல கூடாது, விறகு , புல்லுக்கட்டு கொண்டு வருவது தீங்கானது, கெட்ட கனவு கண்டால் சுப விடயங்கள் இடம்பெறாது , எந்த பொருளிலும் இடித்து கொண்டால் சரியில்லை, குங்குமம் கொட்டினால் சுப விடயம் ஏற்படாது, ஒரு விடயத்திற்கு இரட்டை எண்களான நபர்கள் சென்றால் அவை கைகூடாது, இடது கையால் மங்கள பொருளை வாங்கினால் சுப விடயம் கைகூடாது என்று பல்வேறு ரீதியான நம்பிக்கைகள் காணப்படுவது மனிதனின் ஏராளமான சுப விடயங்களை தடை செய்வதாக அமையப் பெறுகிறது. இவை இயற்கையில் இடம்பெறும் விடயமாக காணப்படினும் இந்நம்பிக்கைக்குள் சிக்கிய மக்களுக்கு இவை தம்மில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாகவே காணப்படுகிறது. எனவே இன்றைய சமூகம் இதன் காரணமாக அதிகமான தாக்கத்திற்கு உள்ளாகி உள்ளது.

" நான் எனது திருமணத்திற்காக பெண் பார்க்க செல்லும் போது உறவினர்கள் அடங்களாக 10 பேர் சென்றோம் அப்போது பெண் வீட்டார் எங்களின் எண்ணிக்கையை பார்த்து நீங்கள் இரண்டின் மடங்காக வந்துள்ளீர் இவை ஒரு தீய அறிகுறியை தருகின்றது எனவே இந்த சம்மந்தம் கைகூடும் என நாங்கள் நம்பவில்லை என திருமணத்தை நிறுத்திவிட்டனர்''

(அக்டோபர் 17, இலக்கு குழு கலந்துரையாடல்)

இதனடிப்படையில் இப்பிரதேசத்தில் சுப விடயங்களின் போது இத்தகைய சிறிய சிறிய நம்பிக்கை தொடர்ச்சியாக பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக ஒருவரின் வாழ்க்கையின் முடிவை திசை திருப்புவதாகவும் இத்தகைய நம்பிக்கைகள் காணப்படுகிறது. இத்தகைய நம்பிக்கையின் பின்னால் எவ்வித விஞ்ஞானப் பூர்வ விளக்கம் இல்லாமல் இருந்தாலும் இப்பிரதேச சமூகம் இதனை முழுமையாக நம்புவதால் இவை மக்களின் வாழ்க்கையில் பல முக்கிய திருப்பங்களை ஏற்படுத்துகிறது.

### 06. விஞ்ஞான பூர்வமான விடயத்தை மறுக்கின்றது

ஒரு விடயத்தை விஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு செய்து உண்மையை கண்டறியும் சமூகத்தையே நாம் விருத்தி அடைந்த சமூகமாக அடையாளப்படுத்த முடியும். அந்த வகையில் இப்பாரம்பரிய நம்பிக்கைகள் கொண்ட சமூகத்தில் விஞ்ஞான ரீதியான விளக்கம் என்பது ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக காணப்படுகிறது. குறிப்பாக ஒவ்வொரு இயற்கை நிகழ்வின் பின்னாடியும் ஒரு விஞ்ஞான பூர்வமான விளக்கம் காணப்படுகிறது இதனை புரிந்து கொள்ளும் போது பாரம்பரிய நம்பிக்கைகள் நலிவடைகிறது. குறிப்பாக ஒவ்வொரு கனவின் பின்னாடியும் நமது ஆழ்மனதில் காணப்படும் அடக்க முடியாத ஆசைகளே காரணம்.( Auguest Compte ,1838) ஆனால் சமூகத்தில் கனவே அன்றைய நாளை தீர்மானம் செய்வதாக கருதப்படுகிறது இதன் மூலம் விஞ்ஞான விளக்கம் என்பது வழுவிழக்கிறது. ஒரு மனிதனை பகுப்பாய்வு செய்து விடயத்தை அறியாமல் முன்னோரின் கூற்று சரியாக அமையும் என்ற மதிப்பின் அடிப்படையில் செயற்படும் ஒரு சமூகமாக மாற்றமடைகிறது.

**அட்டவணை 2, விஞ்ஞான விளக்கம் தொடர்பான தரவு**

| இல | விபரம் | ஏற்றுக்கொள்ளுபவர்கள் (%) | ஏற்றுக்கொள்ளாதவர்கள் (%) |
|---|---|---|---|
| 01. | கனவு ஆழ்மனதில் காணப்படும் அடக்க முடியாத ஆசையின் வெளிப்பாடாகும்? | 21 | 79 |
| 02. | கடவுள் தம்முள் வருவதாக நினைப்பது ஒரு வகை உளவியல் பாதிப்பாகும்? | 17 | 83 |
| 03. | இறந்தவர்களிடம் பேச முடியும் என்பது உண்மையா? | 85 | 15 |
| 04. | எண்ணையான உணவுப்பொருட்கள் கொண்ட பொதியில் இரும்பு துண்டு இட்டால் தீயவை அண்டாது என்பதை ஏற்றுகொள்கிறீரா? | 90 | 10 |
| 05. | சனிக்கிழமை இறந்தவர் இன்னொரு துணையை தேடுவார் என்பதை ஏற்றுகொள்கின்றீரா? | 89 | 11 |

மூலம் : வினாக்கொத்து பகுப்பாய்வு 2020

n = 78

இவற்றினை அவதானிக்கும் போது இப்பிரதேசத்தில் பழமையான நம்பிக்கைகளுக்கு முற்றிலும் விஞ்ஞானப்பூர்வ விளக்கதை மறுக்கின்றனர் என்பது புலப்படுகிறது. குறிப்பாக இம்மக்களிடையே இத்தகைய நம்பிக்கைகள் அவர்களின் பண்பாட்டோடு அதிகம் தாக்கம் புரிவதாக அமையப் பெறுகிறது. கடவுள் தன்மீது வந்து தமது குடும்பத்திற்கும் , தனது ஊரிற்கும் குறி சொல்லுவதாக இவர்கள் நம்புகின்றனர். இக்கருத்தை ஒருவர் விஞ்ஞான

பூர்மாக நிரூபிக்க முயன்றாலோ அல்லது இச்சம்பிரதாயத்திற்கு கட்டுப்படாமல் செயற்பட்டாலோ கடவுளின் கோபத்திற்கு ஆளாகுவர் என்ற கருத்தை முன்வைக்கின்றனர். இதன் மூலம் விரும்பியோ, விரும்பாம்மலோ விஞ்ஞான பூர்வ விளக்கத்தை தவிர்க்கின்றனர்.

### 07. முரண்பாடுகள் தோற்றம் பெறவும் ஒரு காரணமாக அமைகிறது

இப்பிரதேசத்தை பொறுத்தவரை அதிகமான முதியோர் காணப்படும் அதே சமயம் இளைஞர்களின் எண்ணிக்கையும் 481 ஆக காணப்படுகிறது. இதன் காரணமாக இளைஞர்கள் புதுமையான சிந்தனையை கூற முதியவர்கள் பழமையான கருத்தை முன்வைக்கின்றனர். இதன் மூலம் அதிகப்படியான முரண்பாடுகள் ஏற்படும் ஒரு இடமாகவும் மாற்றமடைகின்றது. இதன் போது ஒருவரின் கருத்தை ஏற்றுக் கொள்ளல் என்ற பண்பு இச்சமூகத்தில் முற்றிலும் நலிவடைகின்றது. எனவே இத்தகைய விடயத்திலிருந்து சமூகத்தை மாற்ற நினைக்கும் போது சமூகத்தில் முரண்பாடு என்ற ஒரு விடயம் தோற்றம் பெறுகின்றது. (Emile Durkheim ,1858-1916) எனவே பழமைக்கும் புதுமைக்கும் போட்டா போட்டி நிகழும் இடமாக இத்தகைய சமூகங்கள் காணப்படும். குறிப்பாக முதியவர்கள் தமது எண்ணத்தை கட்டாயப்படுத்தி உள் நுழைக்கும் பண்பு தோன்றுவதோடு, நவீன சமூகத்தில் இத்தகைய நம்பிக்கையால் அதிகப்படியான இழப்புக்களையும் எதிர்கொள்ளுகின்றனர்.

இங்கு பண்பாட்டு , பாரம்பரியம் என்பது மிகவும் பிரதான ஒரு விடயமாகும் குறிப்பாக இத்தகைய விடயங்களில் இங்குள்ள முதியவர்கள் எவ்வித மாற்றத்தையும் விரும்புவதில்லை. அவர்களுக்கு முன்னோர் மேற்கொண்ட சம்பிரதாயங்களே நம் வாழ்வை செம்மைப்படுத்தும் என்ற நம்பிக்கையில் அவர்கள் பின்பற்றிய விடயங்களை முழுமையாக கடைப்பிடிக்க எண்ணுகின்றனர். இருந்த போதும் இன்றைய இளைஞர் சமூகம் காலத்தின் தேவைக்கேற்ப இவற்றில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்த முனையும் போது இங்குள்ள முதியவர்கள் அதனை முழுமையாக புறக்கணிக்கின்றனர். இதன் போது இளைஞர் சமூகமானது தாம் தொடர்ந்தும் இவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாக நினைத்து விடயங்களை விபரிக்கும் போது அதிகளவான முரண்பாடுகள் தோற்றம் பெருகின்றன.

> ‘‘ நாங்கள் பண்பாட்டையோ , பாரம்பரியத்தையோ முழுவதுமாக மாற்ற நினைக்கவில்லை இத்தகைய நம்பிக்கைகளில் காலத்தின் தேவைக்கேற்ப சில விடயங்களை கைவிட வேண்டும் அதனால் நம் வாழ்வில் எவ்வித பயனும் இல்லை மாறாக பல இழப்புக்களை தருகின்றன என உண்மையை கூறியதால் இங்கு அதனை மாற்றுவதற்கான எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளவில்லை மாறாக எங்களை சமூக விரோதிகள் போன்று குற்றம் சாட்டுகின்றனர்’’ என கூறுகின்றனர். (அகஸ்ட் 16, நேர்காணல் 5)

இதனடிப்படையில் மாற்றம் என்ற ஒரு விடயம் இவர்களின் வாழ்க்கையில் பல்வேறு முரண்பாடுகளை தருவதாக காணப்படுகிறது. அத்தோடு இப்பாரம்பரிய நம்பிக்கை என்ற விடயத்தில் புதியன புகுத்தல் பழையதை மாற்றல் என்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படாத கருத்தாக நிலவுவதே முரண்பாடுகள் அதிகம் தோன்றுவதற்கு காரணமாக அமைகிறது.

### 08. உடல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படல்

இப்பாரம்பரிய நம்பிக்கைகள் மனிதனுக்கு உள ரீதியான பாதிப்பை காட்டிலும் உடல் ரீதியான பாதிப்பையும் சமூகத்தில் ஏற்படுத்துகிறது. குறிப்பாக இவை உடல் நோயுற்று இருந்தால் கடவுளுக்கு தீ மிதித்தால் சரியாகிவிடும், அலகு குத்தினால் சரியாகிவிடும் , தீய சக்திகள் தன்னுள் இருந்தால் சாட்டை அடித்தால் சரியாகி விடும், தலையில் தேங்காய் உடைக்கும் போது முழுதாக உடைந்தால் நன்மை ஏற்படும், அவை பாதியாக உடைந்தால் தீய விடயங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கைகள் இன்றளவும் காணப்படுகிறது. குறிப்பாக இவ்வாறான நம்பிக்கைகள் உயிர் இழப்புக்களையும் ஏற்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறான நம்பிக்கைகள் திடீரென தோன்றி விடவில்லை இவை கிரேக்க காலம் காலம் முதல் கிடாவெட்டு போன்ற நம்பிக்கைகள் காணப்பட்டது.(இரா. சந்திரசேகரன்) இவை தொடர்ச்சியாக சங்க காலத்தில் பேய் விரட்டுதல் என்ற ஒரு முறை காணப்பட்டது இதன் மூலம் ஆன்மாவிற்கு உயிர் பலி கொடுப்பதன் மூலம் அவற்றின் தாக்கத்தில் இருந்து விடுபட முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. (குறுந்தொகை, 233)

“ தமக்கு உடல் ரீதியாகவோ , உள ரீதியாகவோ ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டால் கடவுளுக்கு தாம் செய்ய வேண்டிய நேர்த்தி ஒன்று தடைப்பட்டுள்ளது என்று அர்த்தம் அதனை நாம் முறையாக மேற்கொள்ளுமிடத்து நம்முடைய உடல் பூரணத்துவம் அடையும் அதே போல் ஒரு விடயம் இடம்பெற வேண்டுமாயின் அலகு குத்தினால் சரியாகிவிடும்” என்று தமது கருத்தினை தெரிவித்தனர்.

(நேர்காணல் 4)

இப்பிரதேசத்தை பொறுத்தவரை 12% மானோர் இவ்வுடல் ரீதியான நம்பிக்கைகளுக்கு முக்கியம் கொடுப்பவர்களாக காணப்படுகின்றனர். அதாவது இப்பிரதேசத்தில் 91 சதவீதம் இந்து மக்களாக காணப்படுவதன் காரணமாக இந்து சமய விழாக்களில் இத்தகைய நம்பிக்கைகளை அதிகம் காணக்கூடியதாக அமைவதோடு அவற்றை அடுத்து வரும் சந்ததியினருக்கும் கடவுள் மீதான பக்தி என்ற போர்வையில் இந்நம்பிக்கைகளை கடத்துகின்றனர். அத்தோடு இவையேல்லாம் கடவுளுக்கான தொண்டுகள் இவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும் என்பதாலும் இப்பிரதேச மக்கள் தவிர்க்க முடியாமல் தொடர்ச்சியாக இந்நம்பிக்கைகளை கடைப்பிடிக்கின்றனர்.

### 09. எதிர்மறையான சிந்தனையை உருவாக்குகிறது

குறிப்பாக இத்தகைய பாரம்பரிய நம்பிக்கைகள் நடைமுறைக்கு பொருத்தமற்ற ஒன்றாக அமைவதனால் எந்தவொரு விடயத்தையும் நேர் மறையான மனநிலையில் மேற்கொள்ள முடியாமல் போகிறது. ஏதேனும் சிறு தவறு நிகழ்ந்தால் கூட அந்த விடயம் தமக்கு பாதகமாகவே முடியும் உணர்வை தோற்றுவிக்கின்றது. மேலும் சிறு நம்பிக்கையால் முயற்சிகள் தடைப்படுவதோடு எதிர்காலத்தில் வாழ்வை முன்னோக்கி செல்லும் முயற்சிகளும் தடைப்படுகிறது.

ஒரு நல்ல விடயத்திற்கு செல்லும் போது இத்தகைய பாரம்பரிய நம்பிக்கையினால் ஏற்படும் மனக்கசப்பு அன்றைய தினத்தையே எதிர்மறையான கண்ணோட்டத்தில் காண்பதற்கு வழிசெய்கிறது. அதுமட்டுமில்லாமல் இளைஞர் சமூதாயத்திற்கு தன்னம்பிக்கை என்ற ஒரு விடயத்தை உடைப்பதாக இப்பாரம்பரிய நம்பிக்கை காணப்படுகிறது. ஒரு வினைத் திறனான செயற்பாட்டிற்கு செயலுடன் இணைந்த சிந்தனையும் நேர்மறையானதாக காணப்பட வேண்டும் ஆனால் இவ்வகை நம்பிக்கையினால் ஏற்படும் சிறு மனக்கசப்பு கூட நமது செயலையே மாற்றக் கூடியதாக அமைகிறது.

**அட்டவணை 3, எதிர்மறை சிந்தனை தொடர்பான தரவு**

| இல | விபரம் | ஏற்றுக்கொள்ளுபவர்கள் % | ஏற்றுக்கொள்ளாதவர்கள் % |
|---|---|---|---|
| 01 | குங்குமம் கொட்டினால் அன்றைய தினத்தில் ஆபத்தான விடயம் ஏற்படும். | **91** | **09** |
| 02 | காகம் தலையில் இடித்து சென்றால் அன்று ஆபத்து நிகமும். | **82** | **18** |
| 03 | தவறுதலாக எதிலாவது இடித்து கொண்டால் அன்றைய தினம் சரியில்லை. | **80** | **20** |
| 04 | இடது கண் துடித்தால் தீய விடயம் நடக்கும். | **75** | **25** |
| 05 | விதவையின் ஆசி பெற்றால் வம்சம் விருத்தி பெறாது | **92** | **08** |

மூலம் : வினாக்கொத்து பகுப்பாய்வு

n = 78

இதனை அவதானிக்கும் போது இவர்களின் சிந்தனை தொடர்ச்சியாக பழமையான போக்கில் இருப்பதனை காணலாம். ஒரு மனிதனின் உடலிலும் , இயற்கையிலும் இவை இயல்பாக இடம்பெறக் கூடிய ஒரு நிகழ்வுகளே ஆகவே இவற்றை ஒரு பெரும் பொருளாக கொண்டு இம்மக்கள் செயற்படுவது இப்பிரதேச மக்களின் சிந்தனையினதும், செயலினதும் பழமைத் தன்மையை கூறுவதாக அமைகிறது. மேலும் இப்பிரதேச மக்களை பொறுத்தவரை 91 % காணப்படுவதும் இத்தகைய நம்பிக்கைகளின் அதிகரித்த தாக்கத்திற்கு காரணமாக அமைகிறது.

## முடிவுரையும் பரிந்துரைகளும்

குறிப்பாக மானிப்பாய் - சங்குவெளி பிரதேசத்தை பொறுத்தவரை பண்பாட்டு, பொருளாதார விடயங்களில் ஓரளவு முறையாக விருத்தியை அடைந்திருந்தாலும் சமூக ரீதியாக விருத்தியை அடையாமல் காணப்படுவதற்கு காரணமாக இப்பாரம்பரிய நம்பிக்கைகளை அடையாளப்படுத்த முடியும். எதிர்கால சமூகத்திற்கு பழமையான விடயங்களை கொண்டு செல்லும் ஒரு விடயமாகவும் இப்பாரம்பரிய விடயங்களை நோக்க முடியும்.

பிரதானமாக மக்கள் அறிந்திராத விளைவுகளை ஆய்வுகளின் மூலமாகவே எடுத்துக்காட்ட முடியும். அந்தவகையில் சங்குவெளி பிரதேசமானது பிறரது பார்வைக்கும் வெளித்தோற்றத்திற்கும் பண்பாட்டு பாரம்பரியம் நிறைந்த ஒரு இடமாக காணப்பட்டாலும் இந்த பாரம்பரிய நம்பிக்கை இன்றைய சமூகத்தில் பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. எனவே இத்தகைய தாக்கத்திலிருந்து மக்கள் விடுபட பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

அரசோ, சமூக அமைப்புக்களோ மக்கள் மத்தியில் அதிகமான விழிப்புணர்வு செயற்பாட்டை மேற்கொள்ளுவதன் மூலம் மக்கள் இத்தகைய பழமையான சிந்தனையில் இருந்து விடுபட முடியும். அத்தோடு எதிர்கால சமூதாயத்தில் இளைஞர்களின் வகிபாகத்தை புரிய வைப்பதன் ஊடாகவோ, இளைஞர்களுக்கு அதிகரித்த தலைமைத்துவ பயிற்சியை வழங்குவதன் ஊடாகவும் இளைஞர்களை வலுப்படுத்த முடியும். சமமான வாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு உலக நடவடிக்கை தெரிந்து விஞ்ஞான ரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அதிகரிக்கும். ஒவ்வொரு விடயத்தையும் விஞ்ஞான ரீதியாக சிந்திக்க வைக்கும் சில கருத்தரங்குகளை மேற்கொள்ளுவதன் மூலம் ஒவ்வொரு விடயத்தின் பின்னால் உள்ள காரண காரிய தொடர்பை விளங்கிக் கொள்ளுவர்.

முதியோரையும் , இளைஞர்களையும் குழுக்களாக இணைத்து அதிகமாக செயற்படுத்துவதன் மூலம் இருவருக்கும் முறையான புரிந்துணர்வு ஏற்பட்டு யதார்த்தத்தை அறிந்து செயற்படும் சமூகம் உருவாகும். முறையான சமயப் போதகர்கள் மதத்திற்கும் உடல் ரீதியான செயற்பாடுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்ற உண்மைத் தன்மையினை மக்கள் மத்தியில் தெளிவுப்படுத்த வேண்டும். மேலும் அரசானது பழமையான நம்பிக்கைகள் என்ற பெயரில் ஏற்படும் குற்றங்களுக்கு கடுமையான தண்டணைகள் வழங்கும் போதும் எதிர்கால சமூகத்தில் இத்தகைய தாக்கங்களை நிவர்த்தி செய்ய முடியும்.

## உசாத்துணைகள்


01. முனைவர் இரா. சந்திரசேகரன் , “ நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும்”. மகாகவி பாரதியார் நூலகம், கோவை- 641046.
02. டாக்டர் சு. சக்திவேல், “நாட்டுப்புற இயல் ஆய்வு”, ஒன்பதாம் பதிப்பு 2010, பக்.188, மணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.
03. சு. சண்முகசுந்தரம் , “நாட்டுப்புறவியல்”, இரண்டாம் பதிப்பு 2007, பக்.150, காவ்யா, சென்னை.
04. முனைவர் அ. இராசேந்திரன், “நாட்டுப்புறவியல் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள்”, முதற்பதிப்பு 2006, வனிதா பதிப்பகம், சென்னை.
05. லிங்கேஸ்வரி. ஜே, “பதுளை மாவட்ட அப்புத்தளை பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடு” Second Undergraduate – 2014, FAC & FIA, Seusl Colloquium.
06. கேதீஸ்வரி . Y, “ இந்து மதத்தில் பெண்தெய்வ வழிபாடு , யாழ்ப்பாணம் - வலிகாமம் மேற்குப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு” Second Undergraduate – 2014, FAC & FIA, Seusl Colloquium.

07. Reeha. N, " இந்து வாழ்வியற் சடங்குகளின் உளவியல்" Second Undergraduate – 2014, FAC & FIA, Seusl Colloquium.

08. Miss. M. Sivakumar and Dr. Arunthavarajah, "தீவக இஸ்லாமிய மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கைகள் -ஒரு பார்வை" Second International Symposium- 2015, FIA, SEUSL.

09. அப்துல்ரகீம், எம்,எஸ்., (1979), யாழ்ப்பாண முஸ்லீம் வரலாறும் பண்பாடும், நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.

10. முனைவர் கா. காந்தி, "தழிழர் பழக்க வழக்கங்களும் - நம்பிக்கைகளும்".

11. தீராநதி, செப்டெம்பர் 2010, பக். 58.

**websites**

12. மூடநம்பிக்கை மற்றும் அறிவியல்- ஒரு பார்வை https://tamil.samayam.com/religion/superstition/superstition-vs-science-why-still-some-superstition-belif-over-science/articleshow/70877146.cms

13. நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளும் http://www.keetru.com/index.php/2009-11-06-11-47-46/karunchattai-march2020/39824-2020-03-06-07-27-23

14. தமிழர்களின் மூடநம்பிக்கைகள் http://noyyalmedia.com/article_view.php?newsld=353

15. மூடநம்பிக்கையால் குழந்தைகளின் அறிவாற்றல் மூடப்படுகிறது https://malaysiaindru.my/110946/comment-page-1

16. மற்ற மதங்களை காட்டிலும் இந்து மதத்தில் அதிகமான மூடநம்பிக்கைகள் இருப்பது ஏன்? https://ta.quora.com/marra-matankalai-kattilum-intu-matattil-atikamana-muta-nampikkaikal-iruppatu-en

17. தந்தை பெரியார் கையில் உள்ள கைத்தடி மூடநம்பிக்கை https://www.viduthalai.in/component/content/article/75-politics/136081-2017-01-08-10-29-56.html

18. தும்மல் எனும் நிமித்தம்? https://m.dinakaran.com/article/News_Detail/24990/amp

19. புகழ் பெற்ற சில இந்திய மூட நம்பிக்கைகள் https://tamil.boldsky.com/insync/life/2014/10-popular-indian-superstitions/articlecontent-pf19533-005668.html

20. நேரம் சரியில்லை.. மூடநம்பிக்கை http://almadukkur.blogspot.com/2010/12/blog-post_16.html

21. நாத்திகனின் மூடநம்பிக்கை https://tamilbtg.com/the-atheists-superstition